வண்ணாரப்பேட்டை - விம்கோ நகர் இடையே

# 80 கிமீ வேகத்தில் மெட்ரோ ரயிலை இயக்கி சோதனை

■ சென்னை

சென்னையில் வண்ணாரப் பேட்டை - விம்கோ நகர் வழித்தடத் தில் ரயில்வே பாதுகாப்பு ஆணை யர் குழுவினர் 3 நாட்கள் ஆய்வுப் பணிகளை நேற்று நிறைவு செய்தனர். இந்த தடத்தில் மெட்ரோ ரயிலை அதிகபட்சமாக மணிக்கு 80 கி.மீ வேகத்தில் இயக்கி சோதனை நடத்தினர்.

சென்னையில் வண்ணாரப் பேட்டை - திருவொற்றியூர் இடையே முதல்கட்ட மெட்ரோ ரயில் விரிவாக்க திட்டப் பணிகள் ரூ.3,700 கோடியில் மேற்கொள்ளப் பட்டன. இந்த தடத்தில் மெட்ரோ ரயில் பாதுகாப்பு ஆணையர் அபய்குமார் ராய் மற்றும் 3 பாதுகாப்பு துணை ஆணையர்கள் 3 நாட்கள் ஆய்வுப் பணிகளை நேற்று நிறைவு செய்தனர்.

இறுதி நாளான நேற்று, வண்ணாரப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையத்தில் இருந்து விம்கோ நகர் மெட்ரோ ரயில் நிலையம் வரையில் சிக்னல் மற்றும் வேக சோதனையுடன் மெட்ரோ ரயில் அதிகபட்சமாக மணிக்கு 80 கி.மீ வேகத்தில் ஓட்டிச் சோதனை செய்யப்பட்டது.

பாதுகாப்பு ஆணையர் குழு வினருடன் சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் நிர்வாக இயக்குர் பிரதீப் யாதவ், இயக்குநர்கள் ராஜீவ் நராயண் திவேதி, ராஜேஷ் சதுர்வேதி உள்ளிட்டோர் உடனிருந்தனர். இந்த தடத்தில் மெட்ரோ ரயில் இயக்க பாதுகாப்பு ஆணையரக குழுவினர் ஒப்புதல் அளித்தவுடன், மக்களின் பயன்பாட்டுக்கு விரைவில் மெட்ரோ ரயில் சேவை தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.